**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.223/2024 - PW-1**

| | |
|---|---|
| Name | திரு. கண்ணன் |
| Husband/Father Name | தனசேகர் |
| Village /Area | அரக்கோணம் |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | கல்லூரி மாணவர் |
| Age | 22 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 24.09.2025.

**(எதிரிகள் 1 மற்றும் 2 கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். 16.06.2024 அன்று மதியம் 02.30 மணியளவில் TNHB (அவுசிங் போர்டு) அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி அருகே என் அத்தை வீட்டிற்கு இரு சக்கர வாகனத்திற்கு சென்றுகொண்டிருந்தேன் அப்போது என்னை இரு நபர்கள் கல்லால் தலையில் அடித்ததால் சுயநினைவை இழந்துவிட்டேன். பிறகு என்னை அரக்கோணம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தார்கள். மேல் சிகிச்சைக்காக திருவள்ளூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். சுயநினைவு முழுவதும் திருவள்ளூர் அரசு மருத்துவமனையில் தான் வந்தது. அங்கு ஒரு நாள் சிகிச்சை பெற்று பிறகு சென்னை இராஜீவ் காந்தி அரசு மருததுவமனையில் வலது காதில் பிளாஸ்டிக் சர்ஜெரி செய்யப்பட்டது அங்கு நான் 2 வாரம் உள்நோயாளிகாக சிகிச்சை பெற்றேன். இது சம்பந்தமாக புகார் நான் அரக்கோணம் அரசு

மருத்துவமைனில் பாதி சுயநினைவில் இருக்கும்போது கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அது **அதசாஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என்னை யார் கல்லால் அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் memory loss ஆகிவிட்டதால் அது குறிதது எனக்கு நினைவ இல்லை. புகார் வாக்குமூலத்தை அரக்கோணம் அரசு மருத்துவமனையில் கொடுத்தேனா இல்லை திருவள்ளுர் மருத்துவமனையில் கொடுத்தேனா என்று தெரியாது என்று சொன்னால் சரிதான். போலீசார் எழுதிவைத்த வாக்குமூலத்தில் தான் நான் கையொப்பம் இட்டேன் என்றுசொன்னால் அப்போது எனக்கு சுயநினைவு இல்லை. போலிசார் என்னை அழைத்ததன் பேரில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னால் சரிதான்.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.09.24 16:07:50 +0545

II Additional District and Sessions Judge,
Arakkonam.